Reistered as a News Paper in Sri Lanka. பக்கங்கள்: 04 விலை ரூபா: 3-50

# ஈழநாதம்

THE EELANAATHAM Peoples Daily மக்கள் தினசரி

நாதம் 01 பிரமோதூத ஆடு ஐப்பசி மீ 17 உ சனிக்கிழமை (03 - 11 - 1990) ஹிஜ்ரி 1411 ர. ஆகிர். 14 ஓசை 249

## பொறிவெடியில் பல இராணுவம் பலி

(வவுனியா)

பன்மதவாச்சி என்னுமிடத்தில் நவீன முறையில் தயாரிக்கப்பட்ட பொறிவெடி ஒன்றில் சிக்கியதில் பல இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். ஏராளமானோர் காயமடைந்தனர். வியாழன் மாலை நான்கு முப்பது மணியளவில் வவுனியா மாவட்டத்தில் உள்ள பன்மதவாச்சி என்னுமிடத்தில் இடம்பெற்ற பொறிவெடியுடன் இணைக்கப்பட்ட (4ஆம் பக்கம் பார்க்க)

ஆரையம்பதி இராணுவ முகாமினுள்

# முப்பது அப்பாவித் தமிழர்கள் ரயர் போட்டு உயிருடன் எரிப்பு

## இராணுவத்தினதும் முஸ்லிம் ஊர்காவல்படையினதும் வெறித்தனம்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் ஆரையம்பதி இராணுவ முகாமிற்குள் வைத்து முப்பது அப்பாவித் தமிழரைச் சிறிலங்கா இராணுவமும், முஸ்லிம் ஊர்காவல் படையினரும் சேர்ந்து உயிருடன் ரயர் போட்டுக் கொளுத்தினர். இச் சம்பவம் நேற்று முன்தினம் காலை இடம்பெற்றது.

இச் சம்பவம் பற்றித் தெரியவருவதாவது: ஆரையம்பதி, கல்லடி, தாளங்குடா, புதுக்குடியிருப்பு, கிரான்குளம் ஆகிய இடங்களை கடந்த முப்பத்தோராம் திகதி சுற்றிவளைத்த சிங்கள இராணுவத்தினரும், முஸ்லிம் ஊர்காவல்படையினரும் அக் கிராமங்களில் இருந்த அப்பாவிப் பொது மக்களான முப்பது பேரை ஆரையம்பதி இராணுவ முகாமிற்கு அழைத்துச் சென்றனர்.

இதனைத் தொடர்ந்து அன்று இரவு முழுவதும் முகாமிற்குள் வைத்து முப்பது பொதுமக்களையும் அடித்துத் துன்புறுத்தியதன் பின்னர் அடுத்த நாட் காலை நவம்பர் முதலாம் திகதி அன்று முகாமிற்குள்ளேயே (4ஆம் பக்சம் பார்க்க)



மணலாற்றில் நேற்று முன்தினம் வீரமரணமடைந்த மேஜர் சங்கர் (அரியரெட்ணம் நவலோகிதன் தம்பலகாமம்)

## "அருள் 89" தாக்குதல்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்ட சின்னவத்தை சிறிலங்கா இராணுவ முகாம் காவல் அரண் மீது விடுதலைப்புலிகள் (4 ஆம் பக்கம் பார்க்க)

## மன்னாரில்மோதல் தொடர்கிறது இரு புலிகள் வீரமரணம்

(மன்னார்)

கடந்த இரு நாட்களாக மன்னார் மாவட்டத்தில் சிறிலங்கா இராணுவத்தினருக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் மோதல் இடம் பெற்று வருகிறது.

தாராபுரத்துக்கும் மன்னார் நகரப் பகுதிக்கும் இடையில் கடந்த இரு நாட்களாக சிறிலங்கா இராணுவத்தினரை எதிர்த்து விடுதலைப் புலிகள் கடும் தாக்குதல் நடத்திவரு (4 ஆம் பக்கம் பார்க்க)

## ஊர்காவல்படை சூட்டிற்கு தமிழ் இளைஞர் காயம்

(வவுனியா)

வவுனியா எல்லப்பர் மருதங்குளம் பகுதியில் ஊர்காவல்படையினரின் துப்பாக்கிப் பிரயோகத்தில் படுகாயங்களுக்குள்ளான இளைஞர் ஆபத்தான நிலையில் அனுராதபுரம் அரச வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டார் என்று தெரிவிக்கப்பட்டது.

கடந்த 25ஆம் திகதி எல்லைப்புறக் கிராமமான எல்லப்பர் மருதங்குளம் பகுதியில் உள்ள தமது தோட்டத்திற்கு (4ஆம் பக்கம் பார்க்க)

## புனர்வாழ்வு நடவடிக்கைகளை தமிழருக்கு செய்ய முடியவில்லை

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு, திருக்கோணமலை ஆகிய இடங்களைச் சேர்ந்த தமிழ் அகதிகளுக்கு புனர்வாழ்வு நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியாதிருப்பதாக வெளிநாட்டுத் தொண்டர் ஸ்தாபனங்கள் தெரிவித்துள்ளன.

மட்டக்களப்பு அகதி முகாம்களில் இருந்த மக்கள் காடுகளில் தங்கியிருப்பதனாலும் திருக்கோணமலை மக்கள் தமது வீடுகளுக்குத் திரும்ப முடியாததாலுமே புனர் (4 ஆம் பக்கம் பார்க்க)

## கூட்டுறவுச் சங்கங்களில் பொருள்கள் அதிக விலை

(வவுனியா)

வவுனியா தெற்கு தமிழ்ப் பிரிவு பகுதி கூட்டுறவுக் கிளைகளில் அத்தியாவசிய உணவுப் பொருள்களின் விலை மீண்டும் அதிகரித்துள்ளன.

(4ஆம் பக்கம் பார்க்க)

## பாலைக்காட்டுச் சந்தி மோதலில் இரு இராணுவத்தினர் பலி

(ஊர்காவற்றுறை)

ஊர்காவற்றுறையில் நிலை கொண்டுள்ள இராணுவத்தினர் முகாமை விட்டு வெளியேறியபோது விடுதலைப்புலிகள் தாக்குதல் நடத்தியதில் இரு படையினர் கொல்லப்பட்டனர்.

நேற்று முன்தினம் இம்முகாமில் இருந்து இராணுவ அணி ஒன்று வெளியேறி பாலைக்காட்டுச் சந்திக்கு வந்தபோது இவர்கள் மீது விடுதலைப் புலிகள் கடும் தாக்குதலைத் தொடுத்தனர். இத்தாக்குதலில் இராணுவ தரப்பில் இரு (4 ஆம் பக்கம் பார்க்க)

## கொழும்பு அகதி முகாம்களில் ஆயுதக் குழு பலவந்த ஆட்சேர்ப்பு

(கொழும்பு)

கொழும்பில் அகதிமுகாம்களில் தங்கியிருக்கும் தமிழ் இளைஞர்களைப் பலவந்தமாக இயக்கங்களில் சேர்க்கும் நடவடிக்கையில் சிறிலங்கா அரசாங்கத்தால் ஆயுதம்வழங்கப்பட்ட குழு ஒன்று ஈடுபட்டுள்ளதாக அங்கிருந்துவரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

சிறிலங்கா அரசாங்கத்தால் ஆயுதமும், வாகனங்களும் வழங்கப்பட்ட இந்தத்தமிழ்க் குழுவினர் முன்னர் இந்தியாவில் ஆட் கடத்தல், கொள்ளை விடயங்களில் சம்பந்தப்பட்ட டக்ளஸ் தேவானந்த தலைமையிலான குழுவினர் எனவும் தெரிய வருகின்றது.

இக்குழுவினர் பலவந்தமாக தமது குழுவிற்கு ஆட் சேகரிப்பில் ஈடுபட்டுள்ளதோடு, தமிழ் வர்த்தகர்களிடம் மிரட்டிப் பணம் சேர்க்கும் விடயத்திலும் ஈடுபட்டுள்ளனர் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

மேலும் இக் குழுவினரின் நடவடிக்கை பற்றிக் கடந்த வாரம் பாராளுமன்றத்தில் அவசரகாலப் பிரேரணை (4ஆம் பக்கம் பார்க்க)

## யாழ். வைத்தியசாலை திறப்பதில் முரண்பாடான தகவல்கள்

(யாழ்ப்பாணம்)

யாழ். போதனா வைத்தியசாலையை மீண்டும் யாழ் நகரில் எதிர்வரும் திங்கள் இயங்க வைப்பது பற்றி பல சந்தேகங்கள் நிலவுகின்றன. மானிப்பாயில் இயங்கும் யாழ். போதனா வைத்தியசாலை வைத்தியர்கள் தரப்பில் பலவிதமான பேச்சுக்கள் அடிபடுவதை கவனிக்கக் கூடியதாக உள்ளது. இவ் வைத்தியர்களில் ஒரு தரப்பினர் திங்கட்கிழமை மீண்டும் யாழ் நகருக்கு சென்றுவிடுவோம் என்று கூறிவருகின்றனர். ஆனால் அது நிச்சயமாகக் கூறிவிட முடியாது என்று இன்னுமொரு பகுதியினர் கூறிவருகின்றனர்.

இதேவேளை யாழ் நகர போதனா வைத்தியசாலை திருத்த வேலைகள் மிகத் (4 ஆம் பக்கம் பார்க்க)

## மனநோயாளர்களால் நோயாளருக்கு தொல்லை

(சங்கானை)

சங்கானை அரசினர் வைத்தியசாலையில் மனநோயாளர்களை ஏனைய நோய்களுக்காக சிகிச்சை பெற்று வருபவர்களுடன் ஒரே வார்ட்டில் தங்க வைத்து சிகிச்சை அளிக்கப்படுகிறது.

இதனால் ஏனைய நோய்களுக்காக சிகிச்சை பெறும் பல நோயாளிகளுக்கு இங்கு தங்கியிருக்கும் மனநோயாளிகள் தொல்லை கொடுத்து வருகிறார்கள். தெல்லிப்பளையில் இருந்து இங்கு கொண்டு (4 ஆம் பக்கம் பார்க்க)

## பரீட்சை விண்ணப்பங்களைக் காரியாலயத்தில் பெறலாம்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட ஒவ்வொரு பாடசாலை அதிபரும் தமது க. பொ. த. சாதாரணதர மாணவர்கள் இறுதிப்பரீட்சைக்கு விண்ணப்பிப்பதற்குரிய படிவங்களை கல்வித் திணைக்களத்திடம் இருந்து இதுவரை பெற்றுக் கொள்ளாவிடில் பாடசாலையின் பெயர் மாணவர் தொகை என்பவற் (4 ஆம் பக்கம் பார்க்க)

## வரிவிளம்பரம்

**சமையல்காரர் தேவை**

50–100 பேர் கொண்ட தொழில் இடங்களுக்கு சைவ அசைவ உணவு சமைக்கக் கூடிய ஆண் சமையல்காரர்கள் தேவை. மொத்தக் குழுவாக இணைந்து எதிர்பார்க்கும் சம்பளம் பிற தேவைகள் உட்பட ஒரே தடவையில் விண்ணப்பிக்கவும். தொடர்புக்கு ஈழநாதம் யாழ்ப்பாணம். விண்ணப்ப முடிவுத் திகதி 09-11-1990

(B-1551)

**டில்கா வாச் வேக்ஸ்**
**DILKA WATCH WORKS**

வாடிக்கையாளரின் வசதிக்கமைய எமது ஸ்தாபனம் மானிப்பாய் வீதி, ஆனைக்கோட்டையிலும் இல. 3 சித்தன்கேணி றோட் பண்டத்தரிப்பிலும் இயங்குகின்றது. சகல மணிக்கூடுகளும் றேடியோக்களும் உத்தரவாதத்துடன் திருத்திக் கொடுக்கப்படும். சகல எலக்ரோனிக் பற்றறிகளும் விற்பனைக்கு உண்டு.

B-1554


# யாழ். நகர் பகுதிகளில் மருந்துகள் யானை விலை

(யாழ்ப்பாணம்)

உயிர்காக்கும் மருந்து வகைகளுக்கு யானை விலை கொடுத்து வாங்க வேண்டிய வேதனையான நிலை யாழ். நகரில் நிலவுகிறது. பல நோய்களுக்கு நிவாரணியான எத்நோளமசின் வில்லை ஒன்றின் முந்திய விலை ரூபா 2 இன்று சில மருந்தகங்களில் வில்லை ஒன்று ரூபா 5க்கு விற்பனையாகின்றது. ரூபா 1 விற்ற அம்பிசிலின் வில்லை ரூபா 3 விற்கிறது. கர்ப்பிணிகளுக்குத் தேவையான ஒப்றோன் (30 வில்லைகள் அடங்கிய பெட்டி) விலை ரூ. 35 இன்று இதன் விலை ரூ. 150 ஆகும். ஐந்து சதம் விற்ற பிறிற்ரோன் 50 சதமாக உயர்ந்து விட்டது. இத்தனைக்கும் இந்த மருந்து வகைகள் கடந்த ஜூன் மாதத்துக்கு முந்திய கையிருப்புகளாம் இந்த ரக மருந்துகளெல்லாம் இந்தியத் தயாரிப்புகளாம். கொழும்பில் இறக்குமதியாளரிடம் இருந்து 20 வீதம் கழிவுடன் இந்த மருந்து வகைகள் தருவிக்கப்பட்டவை.


**இராசா டீசல் என்ஜினியர்ஸ்**

திங்கட்கிழமை 05-11-1990 முதல் பழைய இடமாகிய 180. பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணத்தில் மீண்டும் சேவையை ஆரம்பிக்கின்றது என்பதை அறியத் தருகின்றோம். (R- 796)


## தற்கொலை முயற்சி

(மானிப்பாய்)

மனைவியுடன் ஏற்பட்ட தகராறு காரணமாக ச. பஞ்சலிங்கம் என்பவர் கிருமிநாசினி அருந்தி தற்கொலை செய்ய முயற்சித்தார்.

நேற்றுமுந்தினம் மூன்று மணியளவில் புன்னாலைக் கட்டுவனைச்சேர்ந்த இவர் மனைவியுடன் ஏற்பட்ட தகராறு காரணமாகதோட்டத்திற்குத் தெளிப்பதற்கு வாங்கி வைத்திருந்த தமரோன் கிருமிநாசினியை அருந்தித் தற்கொலைக்கு முயற்சி செய்ததாக மானிப்பாய் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட சமயம் அவரை வைத்தியசாலைக்கு எடுத்து வந்தவர் வைத்தியருக்குத் தெரிவித்தார்.

இவ்வாறு நேற்று முந்தினம் நாலுபேர் இவ்வாறு தற்கொலை செய்ய முயற்சித்து மேற்படி மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ச)

## போரூட் உதவி

(சங்கானை)

வலிகாமம் வடக்கிலிருந்து சிறிலங்கா இராணுவ நடவடிக்கை காரணமாக இடம் பெயர்ந்து சங்கானை உதவி அரசாங்க அதிபர் பிரிவில் இயங்கிவரும் அகதிமுகாம்களில் தங்கியுள்ளவர்களுக்கு ''போரூட்'' நிறுவனம் உலர் உணவுப் பொதிகளை வழங்கி வருகிறது.

இப்பகுதிக்கு கடந்த சில நாட்களாக பெருந்தொகையான வலிகாமம் வடக்கு மக்கள் இடம் பெயர்ந்து வந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (க)

# தேடி நாடு திரும்பிடுவர்!

நித்தமும் வேட்டுச் சத்தம்
நம் நிலத்தினில்...
நித்திரையும் இன்றி சிலர்
நெடுநாளாய்ப் போர்
நடத்த......
பத்திரமாய் ஒரு கூட்டம்
போகுதடா
வெளிநாடு.

யுத்தத்தினை வென்று இங்கு
வெற்றி
வந்தவேளை......
சத்தியமாய், அவர்கள்தான்
சொந்த நாடு காத்தவர்
என்று......
சித்திரமாய்க் கதைகள்
பேசி......
தேடி நாடு
திரும்பிடுவர்

—பைப்


**வடமாகாண தெங்கு பனம்பொருள் உற்பத்தி விற்பனவுக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம்**

**விவசாயப் பயிற்சிக் கல்லூரி**
**திருநெல்வேலி**

எமது உற்பத்தித் தொழிற்பாடுகளுடன் தொடர்புடைய கீழ்வரும் பொருள்களை விலைக்கு வழங்க வசதியுள்ளோர் எம்முடன் தொடர்புகொள்ளவும்.

(1) III Phase — 5 HP — Generater
20 K.W., 15 K.W., 10 K. W.
(2) Diesel Engine — 5 HP to 7.5 HP
Slow Speed or High Speed
(3) Brich meter
(4) Super Pospate
(5) P H. Paper

தலைவர்,
வடமாகாண தெ. ப. பொ. கூ.
சங்கங்களின் சமாசம்

(B 1555)

**நிதி உதவிக்கான இசைநிகழ்ச்சி**

**தமிழீழ விடுதலைக் கீத ஒளிப்பதிவு நாடா நிதிக்காக**

மட்டக்களப்பு பாடுமீன் கலைமன்றத்தினர்
வழங்கும்
தமிழீழ இசைக்குழுவினரின்

**''போர்க்கால ராகங்கள்''**

இடம்:- நல்லூர் சாதனா சி.சி.த.க. பாடசாலை
காலம்:- 02 - 12 - 90 ஞாயிறு பி.ப. 2மணி
கட்டணம்:- 20/- சிறுவருக்கு 10/-

(R/794)

**யாழ். பல்கலைக்கழகம்**
**இலங்கை**

**மாணவர் வதிவிடம்**


யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் தங்கியிருப்பதற்கு வீடுகள் / அறைகள் தேவைப்படுகின்றன.

பல்கலைக்கழகத்திலிருந்து ஐந்து மைல் சுற்றாடலில் வீடுகள் உடையவர்கள் வீட்டினை- வீட்டின் ஒரு பகுதியினை- அறையினை வாடகைக்கு கொடுக்க விரும்பினால் விலாசத்தையும் எத்தனை மாணவர்கள் தங்கலாம் என்பதையும் உணவு வழங்க முடியுமா என்பதையும் தெரிவித்து பல்கலைக்கழக மாணவர் நலச்சேவைகள் சிரேஷ்ட உதவிப் பதிவாளருக்கு 05. 11. 90க்கு முன்பு விண்ணப்பிக்கவும்.

பதிவாளர்

01 . 11 . 90 (B/1556)


## 31ஆம் நாள் நினைவஞ்சலி



## குமரகுரு ஜெயராசா
## (றவாஸ், இன்பருட்டி)

வீர ஜனனம் 14 - 06 - 1969 வீர மரணம் 03 - 10 1990

வீரமரணமடைந்த றவாஸின் ஆத்மா சாந்தி அடையப் பிரார்த்திப்பதுடன் அந்தியேட்டிக் கிரியைகளில் கலந்து கொள்ளுமாறு அனைவரும் அழைக்கப்படுகின்றனர்.

தந்தை: குமரகுரு
தாய்: தங்கமாமயில்
அண்ணன், அக்காமார், தங்கைமார், தம்பிமார்,
மாமிமார், மாமன்மார், பெரியப்பா,
சித்தப்பா குடும்பத்தினர், மருமக்கள், பேர்த்திமார்,
நண்பர்கள், உற்றார், உறவினர்கள்.

இன்பருட்டி,
பருத்தித்துறை.

(R/792)

## 5ஆம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு : 20. 05. 1958

உதிர்வு : 29. 10. 1985

திதி: 03. 11. 1990

## கருணைப்பிரகாசம் ஜெயப்பிரகாசம் (ஜெயா)

ஐந்தாண்டு காலம் ஓடியே சென்றாலும்
ஓடாது உன்நினைவு ஓரங்க நாடகத்தில்
பாராண்டு பலகனவு கண்டாய் பாரினிலே
பாவியுனைப் பிரிந்து நாம்பார்த்தென்ன பூமியிலே
சீராண்டு சிறப்புடனே சாளரத்தில்யாம் வாழ
சிறந்த நல்வாழ்க்கை சிறப்பாய் அமைப்பாயே
யாராண்டு யாம்சிறப்போம் யாரெம்மைப் பார்ப்பார்
யாதுமுன் துணையின்றி யேதும் நடவாதே

உமது நினைவால் துயருறும்
அன்புள்ள
ஐயா, அம்மா,
தங்கைகள், தம்பி,
உற்றார், உறவினர்.

தொண்டமானாறு,
(R-783)

## சிந்தனைக்கு

எப்பொருள் யார் யார் வாய்க்கேட்பினும் அப்பொருள் மெய்ப்பொருள் காண்பதறிவு.

— திருவள்ளுவர்

ஈழநாதம்

31, வைமன்வீதி, யாழ்ப்பாணம் 03-11-90
தொலைபேசி
ஆசிரியபீடம்: 025-2839 நிர்வாகபீடம்: 2208
த.பெ.எண் 05

# மெய்ப்பொருள் காண்பது அறிவு

சிறிலங்கா அரசாங்கம் தனது வானொலி, தொலைக்காட்சி ஆகிய வெகுசனத்தொடர்பு சாதனங்கள் எவ்வாறு தமிழரின் விடுதலைப் போராட்டத்தை மழுங்கடிக்கவும் திசை திருப்பவும் பயன்படுத்துகின்றதோ அதேபோன்று இந்திய வானொலியும், தொலைக்காட்சியும் இந்திய - இலங்கை ஒப்பந்தத்தின்பின் தமிழர் போராட்டத்தைக் கொச்சைப்படுத்தியும், திரித்துக் கூறியும் செய்தி வெளியிட்டு வருகின்றன.

பொதுவாகவே மேற்குலகவெகுசனத் தொடர்பு சாதனங்கள் தங்கள் நாடுகளில் நலன்பேணும் கருவிகளாகவும், மூன்றாம் உலக நாடுகளில் அதிகாரத்தில் உள்ளவர்களின் நலன்பேணும் கருவிகளாகவும் செயற்படுகின்றன. இந்த வெகுசனத் தொடர்பு சாதனங்கள் சுதந்திரமாகச் செயற்படுபவையாக இருப்பினும் இப் பண்புகளில் இருந்து மாறுபாடு அடைவது குறைவாகும்.

எடுத்துக்காட்டாக இன்று இலங்கைத் தமிழரின் போராட்டத்திற்கு எதிராகவே செயற்படும் இந்திய வானொலியையும், பி. பி. ஸி. போன்றவற்றையும் குறிப்பிடலாம். இந்த செய்தி ஸ்தாபனங்கள் நேரடியாகவும், மறைமுகமாகவும் மக்கள் மத்தியில் குழப்பத்தையும், திரிபு வாதங்களையும் ஏற்படுத்த வல்லவையாகும்.

1987 ஆம் ஆண்டு இலங்கை - இந்திய சமாதான ஒப்பந்தம் கையெழுத்து ஆனதில் இருந்து இலங்கைத் தமிழரின் போராட்டத்திற்கு எதிராகச் செயற்பட்டு வந்த இந்திய வானொலி ஆரம்பத்தில் சம்பவங்களை மட்டும் திரித்தும், உண்மைக்குப் புறம்பாகவும் வெளியிட்டு வந்தது. தற்பொழுது மேலும் ஒரு படி மேலே சென்று சிறிலங்கா அரசாங்கத்தின் திரிபுபடுத்தப்பட்ட கொள்கைகளையும், வரலாற்றையும் ஏற்றுக்கொண்டு செய்தி வெளியிடத் தொடங்கியுள்ளது.

உதாரணமாக நேற்று முன்தினம், மணலாற்றுப் பகுதியில் விடுதலைப்புலிகள் சிறிலங்கா இராணுவத்தினர் மீது மேற்கொண்ட தாக்குதல் பற்றிச் செய்தி வெளியிட்ட இந்திய வானொலி 'வெலிஓயாப்' பகுதியை (மணலாறு) விடுதலைப்புலிகள் தமது தமிழர்பிரதேசத்துடன் இணைக்க திட்டமிட்டுள்ளனர்போல் தெரிகின்றது எனக் குறிப்பிட்டது. அதாவது சிங்களப்பகுதி ஒன்றை தமிழர் பகுதியுடன் இணைப்பதற்கு விடுதலைப்புலிகள் முயற்சிப்பது போன்று (ஆக்கிரமிப்பது போன்று) செய்தி வெளியிட்டுள்ளது. இது இந்திய வானொலியால் தவறுதலாகச் செய்யப்பட்ட பிரசாரமல்ல. வேண்டுமென்றே செய்யப்பட்ட பிரசாரமாகும்.

சில மாதங்களுக்குமுன் அமெரிக்காவில் அச்சாகும் 'நியூஸ் வீக்' சஞ்சிகையில் பாகிஸ்தானுக்கும் இந்தியாவிற்கும் இடையில் உள்ள எல்லைக் கோட்டுப் பகுதி பிழையாக வெளியிடப்பட்டுள்ளது என்று கூறி அச் சஞ்சிகையை நாட்டுக்குள் அனுமதிக்காமல் தடைசெய்த இந்திய அரசாங்கம் இச் செய்தி அறிக்கையில் கவனமில்லாமல் அசட்டையாக இருக்கின்றது என்று சொல்வதற்கில்லை.

இந்தியாவின் திட்டமிட்ட இப் பிரசாரம் காஸாப் பிரதேசத்தையும் மேற்குக் கரைப் பிரதேசத்தையும் பலஸ்தீனியர்கள் ஆக்கிரமிக்கப் பார்க்கின்றார்கள் என்று கூறுவதுபோல் ஆனதாகும்.

இந்த வருடம் யூன் மாதம் 11 ஆம் திகதி விடுதலைப் புலிகளுக்கும் சிறிலங்கா இராணுவத்தினருக்கும் இடையில் மோதல் தொடங்கியதில் இருந்து தமிழ்ப் பகுதியில் கட்டவிழ்த்து விடப்பட்ட இனப்படுகொலையைக் கண்டு கொள்ளாமலே இந்திய வெகுசனத்தொடர்பு சாதனங்கள் செயற்பட்டன. இன்று சிறிலங்கா அரச வட்டாரங்களின் செய்திகளை வெளியிடும் ஒரு சிறிலங்கா வானொலியின் கிளைநிறுவனமாகவே இந்திய வானொலி மாறியுள்ளது.

இந்த நிலையில் செய்திகளை உண்மைக்குப் புறம்பாகத் திரித்துக்கூறும் தொடர்பு சாதனங்கள்மீது மக்கள் விழிப்பாகவும், கவனமாகவும் இருக்க வேண்டும். உண்மைகளை ஆராய்ந்தறிந்து முடிவிற்கு வரவேண்டும். இவை மக்களுக்குத் தெரியாமலே மக்கள் மனதில் கருத்துக்களைப் பதிக்கவல்லன. இதனை மக்கள் உணராவிடில் தாமும் குழப்பத்திற்கு உள்ளாகி மற்றவர்களையும் குழப்பத்திற்கு உள்ளாக்கி விடுவார்கள்.

# பிக்குகளின் அமைப்புகளுக்கு பர்மாவில் இராணுவத் தடை

(ரங்கூன்)

பர்மாவில் புத்தபிக்குகளின் பிரதான நிர்வாக அமைப்பைத் தவிர அங்கீகாரம் பெறாத மற்றக் குழுக்கள் அமைக்கப்படுவதை பர்மிய இராணுவ அரசு தடை செய்துள்ளது.

கடந்த மாதம் கம்யூனிச கிளர்ச்சியில் ஈடுபட்டிருந்தனர் எனக் குற்றஞ் சாட்டப்பட்டு புத்தபிக்குகள் 20 பேர் கைது செய்யப்பட்டனர். அத்துடன் மடாலயங்கள் சோதனையிடப்பட்டன.

இதன் பின்னரே இராணுவ அரசு இந்த உத்தரவைப் பிறப்பித்துள்ளதாக ஜெனரல் ஷா உமான் அறிவித்தார்.

# “உதிக்கும் திசைநோக்கி உன்னத பயணம்”

2

15. 9. 90 அன்று தற்காலிகமாக நாங்கள் தங்கியிருந்த இடத்திலிருந்து அடுத்த இடத்தை நோக்கிச் சென்றோம். இந்தப்பிரயாணம் சுமார் நான்கு மணித்தியாலங்கள் நீடித்தது: இதில் ஒரு மணித்தியாலம் நடைப்பயணம். காட்டின் நடுவே அமைந்திருந்த ஒரு பெரிய முகாமுக்

யில் இயக்கத்துக்குள் சென்றவன் தப்பிவிட்டான் என்று எண்ணுகிறார்கள். யாழ்ப்பாணத்திலோ மண்போனாலும் பரவாயில்லை. மகன் வந்தால் போதும் என்றநிலை.

மேலும் சிலரை மாத்தயா விசாரித்தார். பொதுவாக எல்லோரிடமிருந்தும் ஒரே பதில். வீட்டுக்காரர் எங்கே? தெரியாது. இப்ப எங்கே போயிருப்பினம் என்றுநினைக்கிறீங்கள்? தெரியாது. உயிரோட இருக்கினம் எண்டாவது தெரியுமோ? தெரியாது.

தேவைக்கென பாண், பணிஸ் என்பனவற்றைத் தயாரித்துக் கொள்கிறோம் என்றார் பதுமன். அப்போது ரூபன் ''ஒவ்வொரு முகாமுக்கும் தேவையான மரக்கறி வகைகளை நாமே உற்பத்தி செய்து கொள்கிறோம்'' என்றார். யாழ்ப்பாணத்தில் அரிதாகக் கிடைக்கும் மரக்கறி வகைகளை அங்கே சாதாரணமாக காணமுடிந்தது.

அடுத்து திருமலை மாவட்ட அரசியற் பொறுப்பாளரின் அலுவலகத்துக்குச் சென்றோம். மாவட்டத்தின் நிலைமை பற்றி விசாரித்தோம். மூதூர்ப் பகுதியில் மட்டும் ஆயிரத்துஐம்பத்தேழு வீடுகள் அழிக்கப்பட்டுள்ளன என்றார். எவ்வளவு மக்கள் வெளியேறியுள்ளார்கள் என்று கேட்டோம். கங்குவேலி 180 குடும்பம் 834 பேர், புளியடிச்சோலை 125 குடும்பம் 502 பேர், பாரதிபுரம் 25 குடும்பம் 90 பேர்... என்று ஒரு நீண்ட பட்டியலைக் காட்டினார். அகதிகளாக வெளி மாவட்டங்களுக்குச் சென்றவர்களின் பெயர் விபரம் போன்ற பட்டியலைக் கூடக் கண்டோம். காட்டின் மத்தியில் இருந்து கொண்டு இவ்வளவு தெளிவாக புள்ளி விபரங்களைப் பெற்றுக்கொள்கிறீர்களே! என்று வியந்தோம். நாளைக்கு எனக்கு ஏதாவது ஒண்டெண்டாலும் எனக்குப் பிறகு இந்தப் பொறுப்பை எடுப்பவர் எல்லா விபரத்தையும் உடனே தெரியவேணும் தானே. அதுதான் எப்படி எண்டாலும் எஞ்சியிருப்பவர்கள் மூலம் இவ்விபரங்களை உடனுக்குடன் தெரிந்து கொள்வதற்கு ஏற்பாடுகள் செய்திருக்கிறன்'' என்றார். திருக்கோணமலை மாவட்டத்தில் யுத்தம் இவர் மீதான தாக்குதலுடன் தான் ஆரம்பமானது என்பது நினைவுக்கு வந்தது. அந்தத் தாக்குதலில் இவருடன் கூடச் சென்ற இருவர் உயிரிழந்தனர். இராணுவத்தினரின் துப்பாக்கி ரவைகள் இவரையும் துளைத்தன தற்போதும் முதுகில் குண்டு இருப்பதனால் இயல்பாக கடமைகளை ஆற்றமுடியாத நிலை. எனவே நாளைக்கு எனக்கு ஒண்டெண்டாலும் என்று தொடங்கி இவர்கூறிய வார்த்தைகளைக் கேட்டதும் என் கண்கள் பனித்தன. இதுதான் புலிகளின் பலம், இம்மாதிரியாக இயக்கத்தை கட்டி வளர்த்ததே புலிகளின் தனித்துவத்துக்குக் காரணம் என நினைத்துக் கொண்டேன்.

அகதிகள் முகாம்களின் நிலை எப்படியுள்ளது? என்று கேட்டேன். ''திருமலையில் இருப்பவை அகதிமுகாம்கள் என்ற கருத்தை மாற்றிக் கொள்ளுங்கள் அவை தடுப்பு முகாம்கள்'' என்று ஆரம்பித்து அவை பற்றி கூறத் தொடங்கினார் ரூபன்.

குடும்பமே சிதறிய நிலையிலும் இவர்கள் போராட்டத்திலிருந்து விலகும்படி பிள்ளைகளைக் கேட்கவில்லை. தங்களுக்கு உழைத்துத்தர யாருமே இல்லாத நிலையிலும் இந்தச் சுமைகளைத் தாங்கிக்கொள்ளும் பக்குவத்தை அவர்கள் அடைந்து விட்டார்கள்.

இவர்களைப் பொறுத்தவரை போராட்டம் பற்றிய தெளிவும் உறுதியும் உள்ளது'

— மாத்தயா



குச் சென்றோம். அடர்ந்த கானகத்தினூடே ஒரு குட்டி நகரம் போல் அந்த முகாம் காட்சியளித்தது. புலிகளின் வைத்தியசாலை அரசியற் பிரிவின் தலைமைச் செயலகம் போன்றவை அங்கே அமைந்திருந்தன. அரசியற் பொறுப்பாளர் ரூபன் பெரும்பாலும் இங்குள்ள அலுவலகத்தில் தான் தங்கியிருப்பார். இவரது அலுவலகம் காட்டிலேயே அமைந்திருந்தாலும் கட்டுப்பாட்டில் உள்ள பிரதேசங்களில் எவ்வாறு அரசியற் பிரிவின் செயலகம் அமைந்திருக்குமோ அதே போன்ற அமைப்புடன் விளங்கியது.

முகாமைச் சுற்றிப் பார்க்கப் புறப்பட்ட மாத்தயா அவர்கள் வழியில் சந்திக்கும் ஒவ்வொரு போராளிகளுடனும் உரையாடினார். க. பொ. த (சாதாரணம்) வகுப்பு வரை படித்துள்ள 21 வயதான போராளியொருவரை முதலில் சந்தித்தார். தம்பி உங்கள் ஊர் எது? ஆலங்கேணி. ஆலங்கேணியில் இப்ப எவரும் இல்லையே. அப்பா அம்மா எல்லோரும் எங்கே? அகதியாய்ப்போய்விட்டனர். எங்கே போனார்கள்? எங்கையென்று தெரியாது. பெரும்பாலும் முல்லைத்தீவுப் பக்கமாகத் தான்போயிருப்பினம். போகும் போது அவர்களைச் சந்திக்க முடிந்ததா? ஓம். இந்த வழியால்தான் போனவை. அப்ப நான் சென்றில் நிண்டனான். என்ன சொன்னவை? ''நீ தப்பி விட்டாய் என்று சொல்லி விட்டுப் போனவை''

எனக்கு யாழ்ப்பாண நிலைமைதான் உடனே நினைவுக்கு வந்தது. எத்தகைய போர் நிலைமை இருந்தாலும் தங்களுடைய பிள்ளைகள் இயக்கத்துக்குச் சென்றால் எப்படியாவது அவர்களை மீட்டெடுக்கப் பெற்றோர் என்ன பாடுபடுவார்கள்? அனைத்துப் பெற்றோரும் தமக்குப் பெண் பிள்ளைகள் உண்டு. இவர் ஒருவர்தான் குடும்பத்தைக் காக்க வேண்டும் என்று சொல்வார்கள். போராட்டத்தினால் விளைந்த சூழ்நிலையைப் பயன்படுத்தி எந்த நாட்டுக்காவது 'அகதி'யாக அனுப்பப்பார்ப்பார்கள். ஆனால் கிழக்கிலோ தாம் அடைந்த அகதிநிலை பிள்ளைகளுக்கு வரக்கூடாது. இயக்கத்துக்குள் செல்வதனால் ஒருவன் தப்பி விடுகிறான் என்ற மனோபாவம். வடக்கும் கிழக்கும் மலைக்கும் மடுவுக்கும் உள்ள வித்தியாசம். அங்கே சூழ்நிலையின் கொடூரம் மக்களை உறுதியாக்குகின்றது. தொண்ணூறுக்கு மேற்பட்ட முகாம்கள் உள்ள திருமலை

குழுத் தலைவராகஇருக்கும் ஒருவரை அவர் விசாரித்தார். குடும்பத்தில் மூன்று ஆண் பிள்ளைகள். ஒரேயொரு சகோதரி. மூன்று ஆண்பிள்ளைகளுமே இயக்கத்தில்தான் உள்ளனர். தற்போதைய போரில் காயமடைந்து யாழ்ப்பாணம்வந்த அந்தப்போராளி திருமலைக்குச் செல்லும் வழியில் முல்லைத்தீவில் அகதிகளாக இருக்கும் தாய், தந்தையரைச் சந்தித்தார். உணவு பரிமாறும் போது அந்தத் தாய் சகோதரியின் நிலைமையை மட்டும் அறிந்துவிடு என்று கேட்டுக் கொண்டார். தொழில் வாய்ப்பின் நிமித்தம் மட்டக்களப்புக்குச் சென்ற அவர் அங்கே என்னபாடோ தெரியாது என்று கவலைப் பட்டார். ஆகவே தனது சகோதரியின் நிலை என்ன என்பதை இனித்தான் அறிய முயற்சிக்க வேண்டும் என்று அப் போராளி அவரிடம் தெரிவித்தார்.

''குடும்பமே சிதறிய நிலையிலும் இவர்கள் போராட்டத்திலிருந்து விலகும்படி பிள்ளைகளைக் கேட்கவில்லை. தங்களுக்கு உழைத்துத் தர யாருமே இல்லாத நிலையிலும் இந்தச் சுமைகளை தாங்கிக் கொள்ளும் பக்குவத்தை அவர்கள் அடைந்து விட்டார்கள். யாழ்ப்பாணத்திலோ சகோதரிகளை கரைசேர்க்க வேண்டும். அண்ணன் திருமணம் செய்துவிட்டார். இனி குடும்பப் பொறுப்பு எனது தலையில் தான் என்று கூறி போராட்டத்திலிருந்து தளர்ந்து போகிறார்கள். பொதுவாக எந்தக்குடும்பத்தைப் பார்த்தாலும் மனைவி ஓரிடம், கணவன் ஓரிடம் தாய் தந்தையர் ஓரிடம் பிள்ளைகள் வேறிடம் என்ற நிலைமை தான். இப்படி இருந்தும் இவர்களைப் பொறுத்தவரை போராட்டம் பற்றிய தெளிவும் உறுதியும் உள்ளது'' என்று கூறினார் மாத்தயா.

எமது இருப்பிடத்திற்குத் திரும்பிவந்து எமக்காக வைக்கப்பட்டிருந்த உணவைப் பார்த்தோம். பாண், பணிஸ் போன்றவை இருந்தன. இவற்றை எங்கிருந்து பெற்றுக்கொள்கிறீர்கள் என்று விசாரித்தோம். நாம் சொந்தமாக பேக்கரி அமைத்து எமது

(தொடரும்)

## ஒயில் திருட்டு

(கொழும்புத்துறை)

கொழும்புத்துறை இழக்கு மூன்றாம் குறுக்குத் தெருவில் உள்ள மின்மாற்றியிலிருந்து ஒயில் கடந்த திங்கட்கிழமை இரவு திருடப்பட்டுள்ளது.

தற்போது பெரும்பாலான இடங்களில் மின்மாற்றிகளில் இருந்து ஒயில் பரவலாகத் திருடப்படுவதனால் பிரஸ்தாப மின் மாற்றிகளை அவ்வப் பகுதி இளைஞர்கள் கூட்டுச் சேர்ந்து தீவிரமாகக் கண்காணித்து வருவது குறிப்பிடத்தக்கது.

இருந்தும் கடந்த திங்கட்கிழமை இரவு பெய்த பலத்த மழையைச் சாதகமாக்கித் திருடர் கோஷ்டி தமது கைவரிசையைக் காட்டிப் பல இடங்களில் மின்மாற்றி ஒயில் திருடியுள்ளனர். (24)

## வட்டுக்கோட்டையில் மாவீரர் தின ஏற்பாடுகள்

(அராலி)

வட்டுக்கோட்டைத் தொகுதியில் மாவீரர் தினத்தை முன்னிட்டு பல விரிவான நிகழ்ச்சிகளுக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. வீதிகள் தோறும் முக்கியமான சந்திப்புகளில் அலங்கார வளைவுகள் அமைக்கப்பட்டு வருகின்றன.

இப்பகுதி விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியினர் பல்வேறு கலை நிகழ்ச்சிகளையும் மரம்நாட்டு நிகழ்ச்சிகளையும் ஒழுங்கு செய்து வருகின்றனர். அத்துடன் இப்பகுதியில் வீர மரணமெய்திய போராளிகளின் நினைவாக வீதிகளுக்கு அவர்களது பெயர்களைச் சூட்டும் வைபவங்களும் நடைபெற உள்ளன. (20)

## "எழுச்சி யாத்திரை"

மாவீரர் நாளை முன்னிட்டு விடுதலைப் புலிகள் மகளிர் முன்னணியின் வலிகாமப் பிரிவு மேற்கொண்டுள்ள எழுச்சி யாத்திரை இன்று காலை 9.30 மணிக்கு திருநெல்வேலிச் சந்தியில் ஆரம்பமாக உள்ளது.

ஆரம்ப வைபவத்தில் விடுதலைப் புலிகளின் உறுப்பினர்கள் பலர் உட்பட மாவீரர்களின் பெற்றோர்களும் கலந்துகொள்ள உள்ளார்கள். இந்த எழுச்சி யாத்திரையில் தமிழீழ மக்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு வேண்டுகிறோம்.

## புங்குடுதீவில் மாவீரர் தின ஏற்பாடுகள்

(புங்குடுதீவு)

இம்மாதம் இருபத்தேழாம் திகதி தமிழீழப் பகுதி எங்கும் கொண்டாடப்பட இருக்கும் மாவீரர்தினத்தையொட்டிபுங்குடுதீவு 11ஆம், 12ஆம் வட்டார சித்றூர்அவையினர் பல்வேறு நிகழ்ச்சிகளை ஒழுங்கு செய்துவருகின்றனர். மரம்நாட்டுதல், சிரமதானப் பணிகளைமேற்கொள்ளுதல்போன்றசமூக சேவை நடவடிக்கைகளுடன் கவி அரங்கம், பட்டிமன்றம் போன்ற கலை நிகழ்ச்சிகளையும் ஒழுங்கு செய்து வருகின்றனர். அன்றைய தினம் விடுதலைப் போராட்டத்தில் வீர மரணமடைந்த வேங்கைகளின் நினைவாகவே மேற்படி சிற்றூர் அவையினரால் மரம் நாட்டு விழா நடைபெறும் என்பது குறிப்பிடத்தக்கது. (22)

---

**பரீட்சை**

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

றைக்குறிப்பிட்டு தமது கோட்டக் கல்வி அலுவலகத்திற்கு அறிவித்தால் இப்படிவங்களை பெற்றுத் தருவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என கல்விப்பணிப்பாளர் அறிவித்துள்ளார். (க)

# வடக்கு-கிழக்கு பிரச்சினைக்கு தீர்வுகாண அரசு விரும்பவில்லை

— சிறிமாவோ பண்டாரநாயக்கா

(மாத்தளை)

"நான் ஜனாதிபதியாக தெரிவுசெய்யப்பட்டால் பதவி ஏற்று மூன்று மாதகாலத்திற்குள் வடக்கு கிழக்கு மக்களின் பிரச்சினைகளுக்கும், தென்பகுதிதீவிரவாதபிரச்சினைகளுக்கும் நிரந்தர அரசியல் தீர்வு காண்பேன் என இன்றைய ஜனாதிபதி தேர்தல் காலங்களில் மேடைகளில் கூறினார். இப்பொழுது என்னசெய்கிறார்? பதவிக்குவந்து இரண்டு வருடங்களாகிவிட்டனவடக்கு கிழக்குப் பகுதியில் அப்பாவிகள் கொல்லப்படுகின்றனர். பாதுகாப்புப்படையினரும் அநியாயமாக உயிரிழக்கின்றனர். தெற்கில் ஜே.வி.பி முற்றாக அழிக்கப்பட்டுவிட்டதென கூறிவருகின்றபோதிலும் அசம்பாவிதங்கள் நடைபெறுவதை காணக்கூடியதாக உள்ளது."

என மாத்தளை மாவட்டத்தில் இடம்பெற்ற ஒருபொதுக் கூட்டத்தில் உரையாற்றும் போது சிறிலங்கா எதிர்க்கட்சித் தலைவி சிறிமாவோ பண்டாரநாயக்கா கூறியுள்ளார். அக்கூட்டத்தில் அவர் மேலும் பேசும் பொழுது தமிழ்மக்களின் பிரச்சினையை முற்றுமுழுதாக தீர்த்துவிடல் வேண்டும் எனவும், அரசுமனப்பூர்வமாக விரும்பினால் பேச்சுவார்த்தை மூலம் உடனடியாக நிரந்தரத்தீர்வு கண்டுவிடமுடியும் ஆனால் உண்மையில் அரசு வடக்கு கிழக்கு பிரச்சினையை நிரந்தரமாக தீர்க்க விரும்பவில்லை என்றும் கூறினார்.

### மனிதப் படுகொலைகளை யார் செய்வது

மேலும் அரசு தென்பகுதியில் தீவிரவாதிகளை குறிப்பாக ஜே.வி.பியினரை முற்றாக அழித்துவிட்டதாகவே கூறிவருகிறது இருப்பினும் இங்கு முன்பு போல் மனிதப் படுகொலைகள் நடந்தவண்ணமேஉள்ளன. அப்படியானால் அவற்றை யார் செய்வது?

ஜே.வி.பி முற்றாக அழிக்கப்பட்டிருந்தால் அரசாங்கமே அரசபடைகளை ஏவிவிட்டு தமது அரசியல் எதிரிகளை அழித்துவருகின்றது என்றே எண்ணத்தோன்றுகிறது எனவும் கூறினார்.

## மின்கம்பித் திருட்டு

(பண்டத்தரிப்பு)

சங்கானை பட்டின சபைக்குரிய மின் இணைப்புக் கம்பிகளை வெட்டி விற்றவர் விடுதலைப் புலிகளிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

200 மீற்றர் நீளமான (7044 சைஸ்) சுமார் 5000 ரூபா பெறுமதியான வயர்களை 300 ரூபாவிற்கே விற்றுள்ளார்.

விற்கப்பட்ட வயர் சுருள் சங்கானையிலுள்ள ஒரு வீட்டிலிருந்து மீட்கப்பட்டுள்ளது.

இப்பகுதியில் நடந்தஏனைய சில திருட்டுச் சம்பவங்களிலும் இவர் தொடர்பா என்பதை அறியத் தீவிர விசாரணை நடைபெறுகின்றது.

---

**மனநோயாளர்களால்**

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

வரப்பட்ட சுமார் இருபத்தைந்து மனநோயாளிகள் இங்கு தங்கி சிகிச்சை பெற்று வருகின்றனர். இவர்கள் ஏனைய நோயாளிகளுக்கு தொல்லை கொடுப்பதை தவிர்ப்பதற்காக தற்போது மேலதிக தாதிகள் இந்த வார்ட்டில் கடமை புரிகின்றனர். மனநோயாளிகளை தனிப்படுத்தி வைப்பதற்கு இடவசதி இல்லை என்று வைத்திய அதிகாரிகளால் காரணம் கூறப்படுகிறது. (க)

---

**யாழ்**

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

துரிதமாக நடைபெற்று வருகின்றன. தொண்ணூறு வீதமான திருத்த வேலைகள் நடந்து முடிந்து விட்ட நிலையில் வைத்தியசாலைப் பகுதியை சுத்தம் செய்யும் பணி இடம்பெற்று வருகிறது.

இதைவிட உள்ளூர் செஞ்சிலுவைச் சங்கத் தலைவர் டாக்டர் தெய்வேந்திரன் இது பற்றிக் கூறுகையில் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் யாழ். போதனா வைத்தியசாலையை பொறுப்பேற்பதற்கு உரிய சூழ்நிலை இன்னும் வந்துவிடவில்லை. இதேவேளை யாழ். போதனா வைத்தியசாலை நிர்வாகம் விரும்பினால் மீண்டும் தமது சேவையை பழையபடி நகருக்குள் தொடர உரிமையுண்டு என்றும் கூறினார். அத்துடன் இன்று யாழ். போதனா வைத்தியசாலை நிர்வாகம் ஒரு கூட்டம் கூட உள்ளது. இதிலிருந்து சில தீர்மானங்கள் இயற்றப்பட உள்ளன என போதனா வைத்தியசாலை வைத்தியர் ஒருவர் கூறினார்.

ஆகவே நேற்றுவரை தீர்க்கமான முடிவு எதுவும் எடுக்காத நிலையே இருந்து வருகின்றது என்பது குறிப்பிடத்தக்கதாகும். (லோ)

## நெல் சந்தைப்படுத்தும் சபை வவுனியாவில் சேதம்

வவுனியா நெல் சந்தைப்படுத்தும் சபை சேதமாக்கப்பட்டுள்ளது. கடந்த மகாபோக அறுவடையின்போது ஒரு லட்சத்துப் பத்தாயிரம் கிலோ கிராம் நெல்லை மேற்படி சபை கொள்வனவு செய்தது.

வவுனியா மாவட்ட விவசாயிகளின் நன்மை கருதி நெல்லின் விலை ஒரு கிலோ கிராம் 7.00 ரூபா வீதம் நெல் சந்தைப்படுத்தும் சபை கொள்வனவு செய்தது.

தற்போது இச் சபையின் களஞ்சிய அறையில் குறைந்தளவிலான நெல்லே காணப்படுவதாகவும் இக் களஞ்சிய அறையைப் பார்வையிடுவதற்கு அரசின் உத்தரவை வேண்டி நிற்பதாகவும் இதன் பிராந்திய முகாமையாளர் தெரிவித்துள்ளார். (தி)

---

**ஊர்காவல்படை**

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

சென்ற தமிழ் இளைஞரை நோக்கி, பதுங்கியிருந்த ஊர்காவல்படையினர் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டதில் பாலகிருஷ்ணன் என்பவரது மகனான கோபால் என்று அழைக்கப்படும் இளைஞருக்கு வாயில் படுகாயம் ஏற்பட்டது.

இச் சம்பவத்தை அடுத்து எல்லப்பர் மருதங்குளம் பகுதியில் பீதி நிலவுவதாக அறியப்படுகிறது.

ஊர்காவல்படையினரால் இத் தமிழ்க் கிராமம் அடிக்கடி தாக்குதலுக்குள்ளாகி வருவது குறிப்பிடத்தக்கது. கடந்த ஆகஸ்ட் மாதம் ஒரே குடும்பத்தில் உள்ள மூன்று சகோதரர்களை ஊர்காவல் படையினர் மேற்படி பகுதியில் கொடூரமாகக் கொலை செய்தமை தெரிந்ததே. (தி)

---

**புனர் வாழ்வு**

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

வாழ்வு நடவடிக்கைகள் ஆரம்பிப்பதற்கு தடையாக உள்ளது,

திருக்கோணமலை நகரில் தமிழ் மக்களுக்கு போதிய பாதுகாப்பு இல்லாத காரணத்தினால் அவர்கள் வீடுகளுக்குத் திரும்ப அச்சம் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை வடக்குக் கிழக்கு மாகாணங்களின் புனர்வாழ்வு நடவடிக்கைகளுக்கென வெளிநாட்டு தொண்டர் ஸ்தாபனங்களால் வழங்கப்பட்ட நிதியானது உரிய முறையில் அகதிகளுக்கு செலவிடப்படவில்லையென அந்த தொண்டர் ஸ்தாபனங்களுக்கு புகார்கள் கிடைத்துள்ளன.

---

**பாலைக்காட்டு**

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

படையினர் கொல்லப்பட்டனர். பலர் காயமடைந்தனர். இதனைத் தொடர்ந்து படையினர் முகாமிற்குப் பின்வாங்கிச் சென்றனர். (க)

---

**மன்னாரில்**

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

கின்றனர். இதில் இராணுவத் தரப்பில் பலத்த சேதங்கள் ஏற்பட்டிருக்கலாம் எனத் தெரிகிறது. இருப்பினும் முழுமையான சேத விபரம் தெரியவில்லை. இச் சம்பவத்தில் புலிகள் தரப்பில் இரு போராளிகள் வீர மரணமடைந்துள்ளனர். (க)

---

**கூட்டுறவு**

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

13.50 விற்பனை செய்யப்பட்டு வந்த ஒரு கிலோ கிராம் அரிசியின்விலை 14 50ஆக விற்பனை செய்யப் படுவதாகவும் 14.25 விற்பனைசெய்யப்பட்டு வந்த ஒரு கிலோ கிராம் மா 15.25ஆகவிற்பனை செய்யப் படுவதாகவும் தெரிவிக்கப்பட்டது.

மேற்படி உணவுப் பொருள்களின் விலை அதிகரிப்பிற்கு லொறிகளுக்கு விடப்படும் டீசலின், விலையினை காரணம் காட்டப்பட்டு வருகிறது. ஆனால் கூட்டுறவுச் சங்க லொறிகளுக்கு அரசின் உத்தரவு விலைக்கே டீசல் வழங்கப் படுகிறது என்று தெரிவிக்கப்பட்டது. (தி)

---

**நவீன**

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

கண்ணிவெடி தாக்குதலிலேயேஇவ்வாறுஇராணுவத்தினர் பலர் உயிரிழந்துள்ளனர்.

இந்திய இராணுவத்திற்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் இடம்பெற்ற யுத்தத்தின்போது இந்திய இராணுவத்திடம்இருந்து கைப்பற்றப்பட்ட வெடிமருந்துகளைபயன்டுத்திபுதியமுறை யுத்தியால்நடைபெற்றது

---

**கொழும்பு**

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

மீதான விவாதத்தின்போதும் சில வடக்குக் கிழக்கு எம் பிக்களால் பிரஸ்தாபிக்கப்பட்டதோடு, இவர்களின் இந்த நடவடிக்கையினால் தாம் கொழும்பில் பாதுகாப்பாக இருக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாகவும், தமது வாகனங்கள் இந்த ஆயுதம் தாங்கிய குழுவினரால் பின்தொடரப்படுவதாகவும் இந்த எம். பிக்கள் பிரஸ்தாபித்ததாகவும் தெரிய வருகிறது.

---

**முப்பது**

வைத்து உயிருடன் துடிக்கத் துடிக்க ரயர் போட்டு சிறிது சிறிதாக எரித்துக் கொலை செய்துள்ளனர்.

**புலிகள் தாக்கு**

இதனைத் தொடர்ந்து நேற்றுக் காலை ஆறு பதினைந்து மணியளவில் விடுதலைப் புலிகள் அதே ஆரையம்பதி இராணுவ முகாம் மீது தாக்குதல் தொடுத்தனர். இத் தாக்குதல் சம்பவங்களின்போது அருள் 89 ரக ரொக்கட் ஷெல் தாக்குதலில் முகாமின் பாதுகாப்புக்கு அமைக்கப்பட்டிருந்த காவல் அரண்கள் சேதமாயின. அதற்குள் இருந்த இராணுவத்தினரின் சேத விபரங்கள் எதுவும் தெரியவில்லை.

பின்பு ஆத்திரம் கொண்ட இராணுவத்தினர் அகோர ஷெல் தாக்குதல்களையும், துப்பாக்கி வேட்டுக்களையும் தீர்த்த வண்ணம் வெளியே வந்தனர். இவ்வாறு வெளியே வந்த இராணுவத்தினரை நோக்கி விடுதலைப் புலிகள் மேற்கொண்ட பதில் துப்பாக்கித் தாக்குதல்களில் மீண்டும் படையினர் முகாமிற்குள் ஓடி முடங்கிக்கொண்டனர். (க)

---

**அருள் 89**

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

"அருள்89" தாக்குதலைநடத்தியுள்ளனர்.

கடந்த புதன்கிழமை இரவு 8-00 மணியளவில் இம் முகாம் மீது "அருள் 89" தாக்குதலும் துப்பாக்கிப் பிரயோகமும் மேற்கொள்ளப்பட்டது. இத்தாக்குதலில் இராணுவத்தினருக்கு ஏற்பட்ட சேத விபரம் தெரியவில்லை. (க)

---

## மரண அறிவித்தல்

### இராசா ரயீந்திரன்

தெல்லிப்பளையைப் பிறப்பிடமாகக் கொண்ட இராசா ரயீந்திரன் 24.10.1990 அன்று அகால மரணமானார்.

அன்னார் காலஞ்சென்ற திரு. இராசா, திருமதி சரஸ்வதியின் அன்பு மகனும், செல்லக்குமாரியின் அன்புக் கணவரும், சகு, மோகனராஜ், ரஞ்சன் ஆகியோரின் சகோதரரும், ஜெயச்சந்திரன் (காலஞ் சென்ற பொறியியலாளர்), ரவீந்திரன் ஆகியோரின் மைத்துனரும், பிரதீபன், றாயதீபன் ஆகியோரின் மாமனும் ஆவார். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்: திருமதி சரஸ்வதி இராசா
(சுன்னாகம் நூல் நிலையத்திற்கு அருகாமையில்)

(R. 797)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் வைமன் வீதி, 31-ஆம் இலக்கத்திலுள்ள "ஈழநாதம்" பணிமனையில் 1990 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 03 ஆம் தேதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.